Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, SEPTEMBER 19 2023

செவ்வாய்க்கிழமை செப்டெம்பர் 19, 2023 | ஒளி: 09 கதிர்: 087 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு★ FREE



## “காலை உணவு கட்டாயம்”

■ நூருல் ஹுதா உமர்

பாடசாலை மாணவர்கள் காலை உணவை கட்டாயமாக உட்கொண்டே பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக போசாக்கான உணவுகளையே உண்ணப் பழகிக்கொள்ள வேண்டும் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார். சாய்ந்தமருது மழ்ஹறுஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் திங்கட்கிழமை (18) இடம்பெற்ற காலை ஆராதணை நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2





## திலீபனின் நினைவு ஊர்தி மற்றும் கஜேந்திரன் எம்.பி மீது கொலை வெறி தாக்குதல்

# அறுவர் கைது: இருவர் பெண்கள்

### முல்லையில் கவனயீர்ப்பு போராட்டம்

திருகோணமலை, கப்பல்துறை இராணுவ முகாமுக்கு அருகில் வைத்து யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் திலீபனின் நினைவு ஊர்தி மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பெண்கள் இருவர் உட்பட 6 பேரை, சீனன்குடா மற்றும் திருகோணமலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் நடந்த இடத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோ காட்சிகளின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான பின்னர் வாகனத் தொடரணி தம்பலகமுவவை நோக்கி திரும்பிச் சென்றதுடன் செல்வராசா கஜேந்திரன் எம்.பி, தொலைபேசி ஊடாக, பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்தார்.

அதன் பின்னர், திருகோணமலை பொலிஸ் குழுவொன்று தம்பலகமுவவுக்கு வந்து, செல்வராசா கஜேந்திரன் எம்.பியிடம் முறைப்பாட்டை பதிவு செய்த பின்னர், விசாரணையை சீனன்குடா பொலிஸாரிடம் ஒப்படைத்தது. இவ்வாறு சீனன்குடா பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நால்வரில் மூவர் திருகோணமலை, விஜேசேகரபுரவை வசிப்பிடமாகவும் மற்றையவர் சர்தாபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## திலீபனின் நினைவு ஊர்தி தடை கோரிக்கை நிராகரிப்பு

■ க. அகரன்

தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தியானது, வவுனியாவில் பயணிப்பதற்கு பொலிஸார் தாக்கல் செய்த தடை விண்ணப்பத்தை நிராகரித்த வவுனியா நீதிமன்றம், குழப்பங்கள் ஏற்படாத வகையில் பாதுகாப்பினை வழங்குமாறு பொலிஸாருக்கு திங்கட்கிழமை (18) உத்தரவு பிறத்துள்ளது.

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, தமிழ் தேசிய மக்கள் முன்னனியால் ‘திலீபன் வழியில் வருகின்றோம்’ என்னும் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனியானது, பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்டு, திருகோணமலையில் வலம் வந்த போது சிங்கள இனத்தைச் சேர்ந்த குழு ஒன்றால் தாக்கப்பட்ட நிலையில், வவுனியாவை வந்தடைந்தது.

தொடர்ச்சி P2



## சிறுபான்மை சமூகங்கள் மீதான அடக்குமுறைகள் ஓயவில்லை

சிறுபான்மைச் சமூகங்கள் இன்னும் அடக்குமுறைக்குள் இருப்பதையே திருகோணமலையில் நடத்தப்பட்ட தாக்குதல் வெளிப்படுத்துகிறது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### திலீபனின் நினைவு ஊர்தி மீது தாக்குதல்

## தமிழ் எம்.பிக்கள் உட்பட பலர் கடும் கண்டனம்

■ அ. அச்சுதன், பு. கஜிந்தன், சண்முகம் தவசீலன்

திருகோணமலை நோக்கி பயணித்த திலீபனின் நினைவு ஊர்தி திருகோணமலை, சர்தாபுர பகுதியில் வைத்து சிலரால் தாக்கப்பட்டதோடு பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனும் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு தமிழ் எம்.பிக்கள் உள்ளிட்ட பலர் தமது கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2


## மின்சாரசபை சீர்திருத்தம்: பிரதிநிதிகளுடன் பேச்சு



இலங்கை மின்சார சபை மற்றும் வலுச்சக்தி துறையின் உத்தேச சீர்திருத்தங்கள் தொடர்பாக 35 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கலந்துரையாடியுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்: சபையில் 2 நாள் விவாதம்



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தை வியாழன் (21) மற்றும் வெள்ளிக்கிழமை (22) நடத்துவதற்கு பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ‘ஹரக் கட்டா’ ஆயுதம் பறிக்க முன்னர் 8 சீ.ஐ.டியினர் நீக்கம்

‘ஹரக் கட்டா’ எனப்படும் நந்துன் சிந்தக, பொலிஸ் விசேட அதிரடிப் படையின் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் சேவை ஆயுதத்தை அபகரித்துச் செல்ல முயன்ற சம்பவத்துக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அவர் குறித்த விசாரணைக் குழுவில் இருந்த சீ.ஐ.டியின் 8 புலனாய்வு அதிகாரிகள் நீக்கப்பட்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.



தொடர்ச்சி P2

## 2024 ஒக்டோபர் தாண்டினால் ஜனாதிபதி சட்டவிரோதி

2024ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படாவிட்டால், அடுத்த ஜனாதிபதி சட்டவிரோத ஜனாதிபதியாக இருப்பார் என்று பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### புனர்நிர்மாணப் பணிகள் குறித்து

## இரண்டு வாரங்களில் அறிக்கை சமர்ப்பிக்கவும்

நாட்டில் உள்ள அனைத்து நீர்த்தேக்கங்கள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் நீர் செல்லும் சுரங்கப்பாதைகளின் தற்போதைய பாதுகாப்பு நிலை குறித்து அறிக்கையொன்றை, இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

தொடர்ச்சி P2

## கான்ஸ்டபிளுக்கு கத்தி வெட்டு

புதுக்கடை 6ஆம் இலக்க நீதவான் நீதிமன்றில் கடமையாற்றும் நீதவானின் பம்பலப்பிட்டி பொன்சேகா வீதியில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் கத்தி வெட்டுத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் என்று பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், உத்தியோகபூர்வ இல்லத்துக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த காரின் கண்ணாடியை கழற்றும் சத்தம் கேட்டு, பொலிஸ் கான்ஸ்டபிள் அந்த இடத்திற்கு சென்றுள்ளார்.

தொடர்ச்சி P2

### ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விவகாரம்:

## அமைச்சர் ஹரீனின் அடிப்படை மனு வாபஸ்



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தம்மை கைது செய்வதை தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி ஹரீன் பெர்னாண்டோவால் மனு தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறல் மனு, திங்கட்கிழமை (18) வாபஸ் பெறப்பட்டது.

தொடர்ச்சி P2



## குருநாகல் முன்னாள் மேயருக்கு பிடியாணை

### மேன்முறையீட்டு நீதிமன்றின் உத்தரவுக்கு இடைக்காலத் தடை

குருநாகலில் உள்ள அரசர் புவனேக பாகுவின் அரண்மனைக்கு ஏற்பட்ட சேதம் குறித்து, குருநாகல் முன்னாள் மேயர் உள்ளிட்ட ஐவரைக் கைது செய்வதற்கு பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை அமல்படுத்த வேண்டாம் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு, உயர்நீதிமன்றம் திங்கட்கிழமை (18) இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்தது.

தொடர்ச்சி P2




## பகிடிவதை குறித்து முறையிடுங்கள்

பகிடிவதை குறித்த முறைப்பாடுகளை மாணவர்கள் அல்லது பொதுமக்கள், பொலிஸாரின் ஹொட்லைன் மற்றும் வட்ஸ்அப் எண்களில் சமர்ப்பிக்குமாறு உயர்கல்வி அமைச்சு தெரிவித்தது. அதன்படி, 1997 என்ற ஹொட்லைனுக்கு அல்லது 076-5453454 என்ற எண்ணுக்கு வட்ஸ்அப்பில் முறைப்பாடு சமர்ப்பிக்கலாம் என்று அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## எம்.பியின் கார் மீது சூடு; விசாரணை சீ.ஐ.டி வசம்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் வாகனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வு திணைக்களம் (சி.ஐ.டி) பொறுப்பேற்றுள்ளது.

அநுராதபுரத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர், ஞாயிற்றுக்கிழமை (17) இரவு 10.30 மணியளவில் அவர் வீடு திரும்பியவுடன் இனந்தெரியாத துப்பாக்கிதாரி ஒருவர் அவரது வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.



காரில் அவர் மட்டுமே இருந்ததாகவும், தாக்குதலில் அவருக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்த பொலிஸார், காரின் இடது பின் இருக்கை பகுதியில் இரண்டு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## திலீபனின் நினைவு ஊர்தி தடை கோரிக்கை நிராகரிப்பு

குறித்த ஊர்திப் பவனி வவுனியாவில் இடம்பெற்றால் பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுவதுடன், இன நல்லுறவு சீர்குலையும் என வவுனியா பொலிஸில் இருவர் முறைப்பாடு செய்திருந்தனர். குறித்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த ஊர்திப் பவனிக்கு பொலிஸார் வவுனியா நீதிமன்றில் தடை உத்தரவு கோரியிருந்தனர்.

அதனை கவனத்தில் எடுத்த மன்று, இறந்தவர்களை நினைவு கூரும் உரிமை அனைவருக்கும் உள்ளது என்பதை சுட்டிக் காட்டி, பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்ததுடன், இன முரண்பாடுகள் மற்றும் குழப்பங்கள் ஏற்படாத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

# அறுவர் கைது: இருவர் பெண்கள்

திருகோணமலை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவரும் மணயவெளி மற்றும் சுமேதங்கரபுர பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்று தெரியவருகிறது.

இதேவேளை, இந்தத் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, தேவிபுரம் பகுதியில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று திங்கட்கிழமை (18) காலை 11 மணியளவில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

## தமிழ் எம்.பிக்கள் உட்பட பலர் கடும் கண்டனம்

15ஆம் திகதி பொத்துவில் பகுதியில் இருந்து நல்லூர் நோக்கிய தனது பயணத்தை தொடர்ந்த திலீபனின் நினைவு ஊர்தியானது, ஞாயிற்றுக்கிழமை (17) மூதூர் கிழக்கு - கட்டைபறிச்சான் பகுதியில் இருந்து ஆரம்பித்து ஆலங்கேணி, தம்பலகாமம் ஊடாக திருகோணமலை நோக்கி ஏ6 பிரதான வீதியூடாக பயணித்தது.

அப்போது சர்தாபுர பகுதியில் வீதியில் கற்களைப் போட்டு வழிமறித்து, குறித்த வாகனம் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த சிலரால் தாக்கப்பட்டுள்ளது.

இதன்போது வாகனத்தில் அமர்ந்திருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரனும் வாகனத்தில் இருந்து இறக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துக்கு, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார், வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் உள்ளிட்ட பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

## சிறுபான்மை சமூகங்கள் மீதான அடக்குமுறைகள் ஓயவில்லை

பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதான தாக்குதலையும் அவர் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

அவரது கண்டன அறிக்கையில் குபிப்பிடப்பட்டுள்ளதாவது: சிறுபான்மைச் சமூகங்கள் இன்னும் அடக்குமுறைக்குள் இருப்பதையே திருகோணமலையில் நடத்தப்பட்ட தாக்குதல் வெளிப்படுத்துகிறது. சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலை என்றால், சிறுபான்மை மக்களின் நிலை எப்படியிருக்கும்?

பேரினவாதக் கும்பலின் அட்டகாசங்களுக்கு சிறுபான்மை மக்கள் பலியாவது அல்லது அவமானப்படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இவற்றைச் செய்யாமல் சமூக ஐக்கியம் எங்கே வரப்போகிறது?

பொலிஸாருக்கு முன்னால் இவ்வாறன அடாவடித்தனங்கள் இடம்பெறுவது சட்டவாட்சியை கேலிக்கூத்தாக்குகின்றது. சட்டத்தின் ஆட்சியை பேரினவாதக் கும்பல் கையிலெடுக்கும் நிலைமைகள் ஒழிக்கப்படாத வரை, சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பே கிடையாது. அரசியல் உரிமைகளை உணர்வு ரீதியாக மதிக்கவும் இடமில்லாத இந்த ஆட்சியில், நாம் எந்த நம்பிக்கையில் வாழப்போகிறோம்? இவ்வாறு அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

## "காலை உணவு கட்டாயம்"

இயற்கையானதும், போசாக்கானதுமான உணவுகளை விட்டுவிட்டு பொருத்தமற்ற உணவுகளையே நாம் உண்ணத் தொடங்கி உள்ளோம். பெண்கள் வீடுகளில் சமைப்பதை குறைத்துக்கொண்டு வருகின்றனர். தொழில் செய்யக்கூடிய பெண்கள் அதனை சிரமம் என்று பார்க்கின்றனர். குறிப்பாக பெண்கள் சமையலை ஓர் அடிமைத்தனமாக நினைக்கக்கூடாது. சமையல்தான் ஒரு வீட்டின் மிக முக்கியமான விடயமாகும்.

"கல்வியைப் பொறுத்த வரையில் நமக்கு தெரிந்த விடயத்தை ஏனையவர்களுடன் பகர்ந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் எமது அறிவு விருத்தியடையும். எமக்கு தெரிந்த விடயங்களை இரகசியமாக பேணிக்கொள்ளாது ஏனையவர்களுக்கும் சொல்லிக்கொடுக்க மாணவர்கள் பழகிக்கொள்ள வேண்டும்" என்றார்.

கல்வி பொதுத் தராதர உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிகள், வலய மட்ட தமிழ் தினப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவிகள், கோட்ட மட்ட சிறுவர் விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்று வலய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் என பலர் இந்நிகழ்வின் போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் எம்.சீ.என் றிப்கா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான எஸ். முபாரக், எம்.எப்.ஐ.மர்சூனா உள்ளிட்ட ஆசிரியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## மின்சாரசபை சீர்திருத்தம்: பிரதிநிதிகளுடன் பேச்சு

மின்சாரத் துறையின் சீர்திருத்தங்களின் முன்னேற்றம், புதிய உத்தேச மின்சாரச் சட்டத்தின் கட்டமைப்பு, நிலைமாறு காலக்கெடு, மனிதவள முகாமைத்துவம் மற்றும் இடமாற்றத் திட்டங்கள் குறித்து அமைச்சர் விளக்கமளித்தார்.

ஊழியர்களின் நலன்கள் மற்றும் ஓய்வூதியங்கள், சீர்திருத்த செயலகத்தை நிறுவுதல் மற்றும் வாரிசு நிறுவனங்களை நிறுவுதல், அபிவிருத்தி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட உதவிகள் குறித்து தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு விளக்கமளித்ததாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மின்சார சபையின் அனைத்து தொழிற்சங்கங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களும் சீர்திருத்த செயலகத்தின் தலைவரும் கலந்துகொண்டதாக அமைச்சர் கூறினார்.

## 2024 ஒக்டோபர் தாண்டினால் ஜனாதிபதி...

நாவலயில் உள்ள சுதந்திர மக்கள் சபையின் தலைமைக் காரியாலயத்தில் திங்கட்கிழமை (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக அடுத்த வருடம் நடைபெறவிருந்த ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதே பொருத்தமானது என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் ஒக்டோபர் மாதத்திற்கு பின்னர், புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படாவிட்டால் ஜனாதிபதியின் அனைத்து கடமைகளும் நீக்கப்படும் என்று தெரிவித்த பேராசிரியர் ஜி.எல். ஜனாதிபதி தேர்தலை உரிய நேரத்தில் நடத்தாவிட்டால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் எனவும் தெரிவித்துள்ளார்.

## இரண்டு வாரங்களில் அறிக்கை சமர்ப்பிக்கவும்

பாதுகாப்பு நிலை பெறப்பட்ட தொழில்நுட்ப தகவல்களின் அடிப்படையில், அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்நிர்மாணப் பணிகள் மற்றும் இதற்காக எதிர்பார்க்கப்படும் செலவுகளை உள்ளடக்கிய அறிக்கையையே அவர் கோரியுள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள் மற்றும் நீர் செல்லும் சுரங்கப்பாதைகளின் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பில் குறித்த துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகளுடன், ஜனாதிபதி அலுவலகத்தில் திங்கட்கிழமை (18) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த அறிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம்



சமர்ப்பித்து, உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகார சபை, மின்சார சபைக்கு சொந்தமான நீர்த்தேக்கங்களில் இருந்து நீரை எடுத்துச் செல்லும் அனைத்து நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள் மற்றும் சுரங்கப்பாதைகளின் தொழில்நுட்பப் பாதுகாப்பு குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக, நீரை எடுத்துச் செல்லும் சுரங்கப்பாதைகள் அடைப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அவற்றில் சேர்ந்துள்ள மணல் மற்றும் சேற்றை அகற்றி அவற்றை புனர்நிர்மாணம் செய்தல், அண்மைக் கால நிலநடுக்கங்களால் அந்தந்தப் பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கங்கள் மற்றும் சுரங்கப்பாதைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் ஆண்டுதோறும் சாதாரண சூழ்நிலையில் நிகழும் பாதிப்புகள் போன்ற பிரச்சினைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகார சபை, மின்சார சபையின் பொறியியலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்: சபையில் 2 நாள் விவாதம்

பாராளுமன்றம் இன்று (19) முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை கூடவுள்ளது.

ஆட்கள் பதிவு சட்டத்தின் கீழான உத்தரவுகள் மற்றும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் வர்த்தமானி இலக்கம் 2334/47 இல் வெளியிடப்பட்ட உத்தரவுகள் இன்று (19) விவாதிக்கப்பட உள்ளன.

அதனையடுத்து சபை ஒத்திவைக்கப்படும் வேளையில் மாலை 5.00 மணி முதல் 5.30 மணி வரை கேள்விகளுக்கான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் திருமதி குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் வர்த்தமானி எண் 2346/02 இல் வெளியிடப்பட்டுள்ள உத்தரவுகள் புதன் (20) விவாதத்திற்கு உட்படுத்தப்பட உள்ளன. அதன் பின்னர் ஆளுங்கட்சியால் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்புப் பிரேரணை மாலை 5.00 மணி முதல் 5.30 மணி வரை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## காான்ஸ்டபிளுக்கு கத்தி வெட்டு

அப்போது அவர்கள் தப்பியோட முயன்ற நிலையில், அவர்களில் ஒருவர் பொலிஸ் கான்ஸ்டபிளை கத்தியால் சரமாரியாக வெட்டிவிட்டு ஓடிவிட்டார்.

கான்ஸ்டபிளின் வலது கை வெட்டப்பட்டதாகவும், சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## அமைச்சர் ஹரீனின் அடிப்படை மனு வாபஸ்

அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவுக்கு எதிரான விசாரணைகளை முடிக்குமாறு பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்தில், கடந்த 13ஆம் திகதி அறிவித்திருந்தார்.

இந்நிலையில், குறித்த மனு, புவனேக அலுவிஹாரே, பிரீத்தி பத்மன் சூரசேன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில், எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குறித்த மனுவை மீளப் பெற தீர்மானித்துள்ளதாக அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ சார்பில் ஆஜரான சட்டத்தரணி மன்றுக்கு அறிவித்தார்.

கடந்த அமர்வின் போது, புவனேக அலுவிஹாரே, பிரீத்தி பத்மன் சூரசேன, ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலிப பீரிஸ் விசாரணைகளை முடிக்குமாறு பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அறிவித்திருந்தார்.

பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக் கோப்புகளை ஆராய்ந்த சட்டமா அதிபர், இது தொடர்பான விசாரணையை முடிக்குமாறு மனுதாரர் ஹரீன் பெர்னாண்டோவிடம் ஜூன் 20ஆம் திகதி பணிப்புரை விடுத்ததாக மன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

மனுவை முன்கொண்டு செல்வதா இல்லையா என்பது குறித்து நீதியரசர் ஜனக் டி சில்வா அங்கம் வகிக்காத நீதியரசர்கள் குழாம் முன்னிலையில், மனுவை 18ஆம் திகதி பரிசீலிப்பதற்கு நீதிமன்றம் திகதி நிர்ணயித்த நிலையிலேயே மனு வாபஸ் பெறப்பட்டது.

## 'ஹரக் கட்டா' ஆயுதம் பறிக்க...

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 'ஹரக் கட்டா'வுக்கும் அவரைச் சந்திக்க வந்ததோருக்கும் இடையிலான தொடர்பு குறித்து விசாரணையில் ஈடுபட்ட அதிகாரிகளே நீக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

திணைக்களத்தில் புலனாய்வுப் பிரிவினர் அதிகமாக இருப்பதால், இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த புலனாய்வு அதிகாரிகள் குறிப்பாக சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வெளியே தங்கி தகவல்களைத் தேடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த அதிகாரிகள் கடமையில் இருந்திருந்தால், 'ஹரக் கட்டா' தப்பிச் செல்ல முற்பட்ட தினத்தன்று சந்தேகத்துக்கிடமான கான்ஸ்டபிள் தப்பிச் செல்ல அனுமதிருக்க மாட்டார்கள் என்றும் அவர் கைது செய்யப்பட்டிருப்பார் என்றும் தெரியவருகிறது.

# பகிடிவதை குறித்து முறையிடுங்கள்

மேலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 0112 123700 என்ற இலக்கத்துக்கும் முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

17 பல்கலைக்கழகங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற பகிடிவதை தொடர்பான 36 முறைப்பாடுகளின் அடிப்படையில் 57 மாணவர்கள் வகுப்புகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் திங்கட்கிழமை (18) இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர், இந்த வழக்கை சி.ஐ.டி விசாரணை அல்லது உள்ளூர் பொலிஸாரிடம் ஒப்படைப்பது குறித்து தீர்மானிப்பதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ, குறித்த ஊடகச் சந்திப்பில் தெரிவித்தார்.

குறித்த இலக்கங்கள் மூலம் போலியான தகவல்களை வழங்குவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் எச்சரித்தார்.

## எம்.பியின் கார் மீது சூடு; விசாரணை சீ.ஐ.டி வசம்

சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்த நிலையில், பொலிஸ் மாஅதிபரின் பணிப்புரைக்கு அமைய அந்த விசாரணை தற்போது குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உத்திக எம்.பியின் வீட்டைச்சுற்றி பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த மாத ஆரம்பம் முதல், பாராளுமன்றத்தில் சுயேச்சை உறுப்பினராக இருக்க, பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மேன்முறையீட்டு நீதிமன்றின்...

இதனடிப்படையில் இந்தச் சம்பவம் தொடர்பில் குருநாகல் முன்னாள் மேயர் துஷார சஞ்சீவ விதாரண மற்றும் ஏனையவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்படக்கூடும் என தெரியவருகிறது.

குறித்த சம்பவம் தொடர்பில் குருநாகல் மேயர், குருநாகல் நகர ஆணையாளர் பிரதீப் நிஷாந்த திலகரத்ன, நகர பொறியியலாளர் சமிந்த பண்டார, மேற்பார்வையாளர் இல்லலுதீன் சுல்பிகர் மற்றும் பேக்கோ இயக்குபவரான லக்ஷ்மன் பிரியந்த ஆகியோரைக் கைது செய்யுமாறு குருநாகல் நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

இதனையடுத்து, தம்மைக் கைது செய்வதற்கு பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை அமல்படுத்துவதைத் தடுக்க உத்தரவிடுமாறு கோரி ஐவரும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஐந்து மனுதாரர்கள் தாக்கல் செய்த ரிட் மனு, மேன்முறையீட்டு நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பிடியாணையை அமல்படுத்த வேண்டாம் என்று தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



## மலையக தொழிலாளர் முன்னணியில் அதிரடி மாற்றம்

■ நிலமேகம் பிரசாந்த்

மலையக மக்கள் முன்னணி மற்றும் அதன் தொழிற்சங்க பிரிவான மலையக தொழிலாளர் முன்னணியில் மறுசீரமைப்பு இடம்பெற்றுள்ளது.

ஹட்டனில் கட்சியின் தலைமை காரியாலயத்தில் வைத்து, செவ்வாய்கிழமை (18) நிர்வாக உறுப்பினர்கள், கவுன்சில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

கட்சியின் கவுன்சில் உறுப்பினர்களாக ஆர். ராஜாராம், கண்மணி சிவனேசன், ஆனந்தன், தாளமுத்து சுதாகரன், க.சிவஞானம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

தொடர்ந்து மலையக மக்கள் முன்னணியின் தலைவராக வே.இராதாகிருஸ்ணனும் செயலாளர் நாயகமாக பேராசிரியர் எஸ் விஜயசந்திரனும் பிரதித் தலைவராக முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர்.ராஜாராமும் தேசிய அமைப்பாளராக ந. பாலமுரளியும் நிதிச்செயலாளராக பி. கிருஸ்ணனும் நியமிக்கப்பட்டனர்.

இதேவேளை, மலையக மக்கள் முன்னணியின் தொழிற்சங்க பிரிவான மலையக தொழிலாளர் முன்னணியிலும் பதவி மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. அந்தவகையில் தலைவராக வே.இராதாகிருஸ்ணன், பதில் செயலாளராக புஸ்பா விஸ்வநாதன், நிதி செயலாளராக தாளமுத்து சுதாகரன், அமைப்பு செயலாளராக எஸ். ஜெயக்குமார், பிரதி பொதுச்செயலாளராக க.சிவஞானம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து மலையக மக்கள் முன்னணியின் இளைஞரணி தலைவராக லெட்சுமனார் சஞ்சய், செயலாளராக கதிர்காமத்தம்பி சுரேன், இணைப்பாளராக கலைக்குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மகளிர் அணி தலைவியாக சுவர்ணலதா இலங்கேஸ்வரன், செயலாளராக கிருஸ்ணவேணி, பிரதி தலைவியாக கலா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதோடு பத்மநாதன் மீண்டும் கட்சியில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

இவ்வாறு புதிய உறுப்பினர்கள் மலையக மக்கள் முன்னணி மற்றும் தொழிற்சங்க பிரிவான மலையக தொழிலாளர் முன்னணியில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# தமிழர், சிங்களவர் என்ற மனநிலையிலேயே பொலிஸாரின் நடவடிக்கைகள் காணப்படுகின்றன

■ மு. தமிழ்ச்செல்வன்

இலங்கை பொலிஸாரின் நடவடிக்கைகள் தமிழர், சிங்களவர் என்ற மனநிலையிலேயே காணப்படுகின்றன என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், பொலிஸார் முன்னிலையில் சில ரௌடிகளால் தாக்கப்படும் போது, பொலிஸார் நடந்துகொண்ட விதம் மிகவும் கண்டனத்துக்கு உரியது எனக் குறிப்பிட்டு, அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்படி குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

கஜேந்திரன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர். அவர் இந்த நாட்டின் ஓர் உயர்ந்த சபையின் கௌரவ உறுப்பினர். அவரை தெருவில் ஒன்று கூடிய சில ரௌடிகள், சட்டத்தை பாதுகாக்க வேண்டிய பொலிஸாரின் முன்னிலையில் தாக்குவது என்பது மிகவும் காட்டுமிராண்டித்தனமான செயலாகும்.

தமிழ் மக்களின் பிரதிநிதி ஒருவருக்கே இந்த நிலைமை என்றால், இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களின் நிலைமை எப்படியிருக்கும்? வன்முறைகளைத் தடுத்து, சட்டத்தை நிலைநிறுத்த வேண்டிய பொலிஸார், அந்த இடத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்காது இருந்தது என்பது, தமிழ் மக்கள் விடயத்தில் பொலிஸாரின் நிலைப்பாட்டை அப்பட்டமாக காட்டி நிற்கிறது. இதுதான் இந்த நாட்டின் நிலைமை.

தமிழ் மக்கள் இரண்டாம் தர பிரஜைகளாக நடத்தப்படுகிறார்கள் என்பதற்கு, கஜேந்திரன் மீதான தாக்குதல் சம்பவம் நல்ல உதாரணமாகும்.

நினைவேந்தலுக்கான உரிமை வழங்கப்பட்டிருந்த நிலையில், அதனை மேற்கொள்ளவிடாது, வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டுமன்றி, மக்கள் பிரதிநிதி ஒருவரை வீதியில் விரட்டி விரட்டி தாக்குபவர்கள் மீதும், அந்தத் தாக்குதல் சம்பவத்தை கட்டுப்படுத்தாது நின்ற பொலிஸார் மீதும் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாய்ந்தமருதில்

# தோணிகளால் வீதியை மறித்து மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

■ பாறுக் ஷிஹான்

கரையோரப் பாதுகாப்பு தரப்பினர் கடலரிப்பபைத் தடுப்பதற்கு எனத் தெரவித்து, பாரிய கற்களை, மீன்பிடி நடவடிக்கைகளுக்காகப் போக்குவரத்து செய்யும் பாதையில் போட்டுவிட்டு, நாள்கள் பல கடந்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக் கண்டித்து, சாய்ந்தமருது பெண்கள் சந்தைக்கு அருகில் உள்ள பிரதான பாதையை, தோணிகளைக் கொண்டு மறித்து, மீனவர்கள் நேற்று (18) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு, உரிய அதிகாரிகள், இதற்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

சாய்ந்தமருது பொலிஸாரும் கரையோரப் பாதுகாப்பு தரப்பினரும் சம்பந்தப்பட்ட இடத்துக்கு வருகைதந்து, மீனவர்களுடன் சமரசமாகப் பேசி, கற்கள் போடும் வேலைகளைத் துரிதமாக செய்கின்றோம் என்று உறுதி தெரிவித்ததற்கு இணங்க, பாதையில் தள்ளி வைக்கப்பட்டிருந்த தோணிகள் அகற்றப்பட்டன.





களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில்

# உலக நோயாளர் பாதுகாப்பு தினம்

■ வ. சக்தி

உலக சுகாதார ஸ்தாபனம், வருடாந்தம் செப்டெம்பர் 17 ஆம் திகதி உலக நோயாளர் பாதுகாப்பு தினத்தை அனுஷ்டித்து வருகின்றது. இந்நிலையில், களுவாஞ்சிகுடி ஆதர வைத்தியசாலை உத்தியோகஸ்தர்களால் உலக நோயாளர் பாதுகாப்பு தினத்தையொட்டி நடைபவனி முன்னெடுக்கப்பட்டது. களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் க. புவனேந்திரநாதன் தலைமையில், வைத்தியசாலையில் இருந்து ஆரம்பமான நடைபவனி, பட்டிருப்பு வீதியூடாகச் சென்று, எருவில் கிராமத்தினூடாக மீண்டும் வைத்தியசாலையை வந்தடைந்தது.

இவ்வருடத்தின் கருப்பொருளாக, நோயாளர் பாதுகாப்புக்காக நோயாளரை ஈடுபடுத்துவதுடன் நோயாளரின் குரலை உயர்த்துவோம்' என்பது அமைந்திருந்தது.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு

# ‘டையிலஸிஸ்’ இயந்திரம் அன்பளிப்பு



■ எச்.எம்.எம் பர்ஸான்

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு ‘டையிலஸிஸ்’ இயந்திரம் சனிக்கிழமை (16) அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

வாழைச்சேனை, நாசிவன்தீவு ஈஸ்ட் லங்கா பொலிசெக் நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.எஸ் சனுான் என்பவரால், இந்த இயந்திரம் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

சிறுநீரக நோயாளிகளின் நலன்கருதி சுமார் 31 இலட்சம் ரூபாய் பெறுமதியான இந்த இயந்திரத்தை அன்பளிப்பு செய்த பணிப்பாளர் ஏ.எஸ். சனுானுக்கு வைத்தியசாலை அத்தியட்சகர் டொக்டர் மதன் நன்றிகளை தெரிவித்தார்.

# இசைக்கருவிகளை கொடுத்து பாலியல் வன்கொடுமை



பாடசாலை மாணவர்கள் செல்வதாக கிடைத்த தகவலின் பேரில் ஞாயிற்றுக்கிழமை (17) பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் பாடசாலை மாணவர்கள் மூவரும் வீட்டின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொனராகலை கோனகனார பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட வகுருவெல பகுதியிலுள்ள வீடொன்றிலேயே இந்தச் சுற்றிவளைப்பு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

பாடசாலை மாணவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது வீட்டின் உரிமையாளர், பாடசாலை உபகரணங்கள் மற்றும் இசைக்கருவிகளை கொடுத்து பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியதாக தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் சில காலமாக பல பாடசாலை மாணவர்களை பாலியல் வன்கொடுமை செய்து வந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் மூவரும் மருத்துவப் பரிசோதனைகளுக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், 49 வயதுடைய சந்தேக நபரை வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

# அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காததால் பல்வேறு அசௌகரியங்கள்

■ செந்தூரன் பிரதீபன்



தற்போது மருந்து தட்டுப்பாடு, சத்திர சிகிச்சை உபகரணங்களின் தட்டுப்பாடு, ஆய்வு கூட இரசாயன பதார்த்தங்களின் கட்டுப்பாடு தொடர்பில் அரசாங்கம் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தரமான மருந்து இன்மை, அதனால் ஏற்படக்கூடிய பாதக விளைவுகள், வைத்தியர்கள், விசேட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் செல்வதால் ஏற்படும் வெற்றிடங்கள் என்பன தவிர்க்க முடியாத விளைவுகளை ஏற்படுத்தும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் வைத்தியர் விஜயரட்ணசிங்கம் தர்ஷன் தெரிவிக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மருந்து தட்டுப்பாடு, தரமற்ற மருந்துகளை பாவனைக்கு உட்படுத்துவது, மருந்துகள் கொள்வனவு செய்யக்கூடிய விலைகளில் இல்லாமை, வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது என்பன தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

முன்மொழிவுகளை ஆராய்ந்து அதன்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்து தரமானதும், இலவச சுகாதாரத்தை வழங்குவதும் அரசாங்கத்தின் கடப்பாடு ஆகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 3 வருடங்களுக்கு முன் கீழே விழுந்தவர் உயிரிழப்பு



வட்டுக்கோட்டை - மூளாய் பகுதியில் 5 பிள்ளைகளின் தந்தையான செ. மகேந்திரம் (வயது 44) என்ற நபர் நேற்றிரவு திடீரென உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

கடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் குடும்பஸ்தர் மயக்கமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். எனினும் அவர் தொடர்ந்து மயக்க நிலையிலேயே இருந்துள்ளார்.

அவர் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கீழே விழுந்தார் எனவும் அதற்கு பின்னர் வழமை போல சாதாரண நிலையில் இருந்ததாக அவரது மனைவி வைத்தியசாலையில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அவரது மூளையில் இரத்தக் கசிவு இருப்பதாக தெரிவித்து, சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இருப்பினும் அவர் சிகிச்சை பலனின்றி நேற்றிரவு உயிரிழந்தார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.


**கம்பஹா மாநகர சபை**

**2024 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் மற்றும் சேவை வழங்குனர்களை பதிவு செய்தல்**

2024 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் மற்றும் சேவை வழங்குனர்களை பதிவு செய்தல் 2023.09.18 ஆம் திகதி முதல் 2023.10.17 ஆம் திகதி வரை வார நாட்களில் நடைபெறும்.

பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கம்பஹா மாநகர சபை கணக்கு பிரிவில் இருந்து அல்லது கம்பஹா மாநகர சபையின் இணையத்தளமான www.gampaha.mc.gov.lk மூலம் விண்ணப்பங்களைப் பெற்கொள்ளலாம். சபையில் நிர்ணயிக்கப்பட்ட பதிவுக் கட்டணத்தைச் செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம். கட்டணத்தை காசோலை மூலமாக செலுத்துவதானால் **“மாநகர ஆணையாளர் மகாநகர சபை – கம்பஹா”** என பெயரிடப்பட வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் போது, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“சேவை வழங்குனர்களை பதிவு செய்தல் 2024”** என்று குறிப்பிட்டு மாநகர ஆணையாளர் மகாநகர சபை - கம்பஹா என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். **(விண்ணப்பத்துடன் வணிகப் பதிவுச் சான்றிதழின் நகல் இணைக்கப்பட வேண்டும்)**

**நகரசபை ஆணையாளர்**
**மாநகர சபை – கம்பஹா**
**2023.09.12**

# அகிம்சை வழி ஊர்தியின் மீதான காடைத்தனமான தாக்குதல்

சிலர், தங்களுடைய கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுத்த உண்ணாவிரதப் போராட்டங்கள் என்பவை, கபடத்தனமான போலி உண்ணாவிரதப் போராட்டங்கள் என்பது தியாகதீபம் திலீபனின் உண்ணாவிரதப் போராட்டத்தில் இருந்து கற்றுக்கொள்ளவேண்டும். அவரால் முன்வைக்கப்பட்ட ஐந்து அம்ச கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமையால், ஒரு சொட்டுத் தண்ணீரைக்கூட உடலுக்குள் செலுத்தாமல் 12 நாளில் உயிர் நீத்தார் தியாக தீபம் திலீபன்.

ஒரு கொள்கையில் ஒருவர் எவ்வளவு உறுதியாக இருக்க முடியும், ஒரு போராட்டத்தை எவ்வளவு உன்னதமாக நடத்த முடியும் என்று உலகுக்கே உணர்த்தியவர்தான் திலீபன். அவருடைய 36 ஆவது நினைவேந்தல், செப்டெம்பர் 26ஆம் திகதியாகும். அதனையிட்டு, அவருடைய உருவப்படம் தாங்கிய வாகன ஊர்தி பவனிவந்தது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த வாகன ஊர்தி, கிழக்கில் அம்பாறை மாவட்டம், பொத்துவிலில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு, யாழ்ப்பாணத்தை நோக்கி செல்லவிருந்தது. எனினும், திருகோணமலை கம்பல் துறைமுக இராணுவ முகாமுக்கு அருகில், தீலிபனின் ஊர்தி மீது ஞாயிற்றுக்கிழமை (17), பெரும்பான்மை இனத்தவர்களால் கடுமையான கொலைவெறித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வடக்கு, கிழக்கில் தமிழர்கள் மற்றும் சிறுபான்மை இனங்களுக்கு எதிரான அரசாங்கத்தின், படையினரின் அடாவடித்தனத்தின் மற்றுமோர் அங்கம், இனவாத, தூஷண வார்த்தைகளை பிரயோகித்து, பெண்களும் உள்ளடங்கிய காடையர் குழுவால் நன்கு திட்டமிட்டு, அப்பட்டமாக அரங்கேற்றப்பட்டுள்ளது,

ஜனநாயக வழியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் மீதும் வெறித்தனமாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நாட்டில் இன, மத வாதங்களை மையப்படுத்தி, மீண்டுமொரு கலவரம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக, இந்திய புலனாய்வுத் துறையினர் இரகசிய தகவலை வெளிட்டுள்ள நிலையிலேயே, இவ்வாறான சீண்டல்கள் அதிகரித்துள்ளன.

தாக்குதல்களுக்கு உள்ளானவர்கள் திருப்பி தாக்கியிருந்தால் நிலைமை மோசமாகியிருக்கும். எனினும், அகிம்சை வழியில் போராடிய திலீபனின் கொள்கைக்கு ஒரு துளியேனும் தீங்கிழைத்துவிடக்கூடாது என்பதற்காக, மௌனமாய் திரும்பியிருக்கலாம். எனினும், தாக்கியவர்கள் இதுதான் தங்களுடைய வீரத்தனம் என்றும், அடிவாங்கியவர்கள் கோழைகள் என்றும் நினைத்துவிடக்கூடாது.

அகிம்சை வழியையே ஏற்றுக்கொள்ள மனமில்லாது, அடாவடியாகச் செய்படும் கூட்டத்திடமிருந்து, நல்லெண்ணத்தை எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும். ஊர்தியின் மீதான தாக்குதலின் மூலமாக, இனநல்லிணக்கம் எதற்கும் தாங்கள் தயாரில்லை என்பதை உலகுக்கு படம்பிடித்து பெரும்பான்மை இனத்தவர்கள் காட்டிவிட்டனர் என்றே கருதவேண்டியுள்ளது.

அகிம்சை வழியில் போராடி, உயிர்த்தியாகம் செய்த ஒரு தியாகிக்கு அதே அகிம்சை வழியில், ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் உட்பட, இனநல்லிணக்கத்தை விரும்பிநிற்கும் தமிழ்மக்கள் அஞ்சலி செலுத்த மறுப்பதும், நடுவீதியில் வைத்து, தாக்குதல் நடத்தி, கொலை செய்ய எத்தனிப்பதும் இந்த நாடு இனவாத, மதவாத சிந்தனைக்குள்ளிருந்து இன்னமும் மீளப்போவதில்லை என்பதையே தெட்டத்தெளிவாக உணர்த்துகின்றது.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# அஷ்ரபை நினைவுகூர்வதால் மட்டும் அவரது கனவு நனவாகி விடுமா?

மொஹமட் பாதுஷா

குருவின் போதனைகளை மதிக்காத, அதன்படி நடக்காத சிஷ்யர்கள் அந்தக் குருவின் இறப்புக்குக் பிறகு அவரது வாழ்க்கையை நினைவுகூர்வதுண்டு. பாடசாலையில் ஆசிரியர்களை மதிக்காத மாணவர்களும் ஆசிரியர் தினத்தைக் கொண்டாடுவதும் உண்டு.

முஸ்லிம் அரசியலில் புதிய மாற்றத்தை ஏற்படுத்திய அரசியல் தலைவரான மறைந்த எம்.எச்.எம். அஷ்ரப் விட்டுச் சென்ற பணியையோ, அவரது கொள்கைகளையோ முன்கொண்டு செல்லாமல், வெறுமனே அவரை நினைகூர்வதில் மட்டும் கவனம் செலுத்துகின்ற முஸ்லிம் அரசியல்வாதிகளைப் பார்க்கின்ற போது, மேற்குறிப்பிட்ட உவமானங்கள்தான் ஞாபகத்திற்கு வருகின்றன.

இலங்கை முஸ்லிம் அரசியலில் மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப் தனித்துவமானவர். அவருக்கென்று வரலாற்றில் தனியிடம் உள்ளது. தனித்துவ அடையாள அரசியலை மக்கள் மயப்படுத்தியது மட்டுமன்றி, குறிப்பாக கிழக்கு முஸ்லிம்களுக்கும் பொதுவாக நாட்டு முஸ்லிம்களுக்கும் குறிப்பிடத்தக்க சேவைகளைச் செய்து விட்டு மறைந்தார்.

தனியொரு முஸ்லிம் கட்சியை உருவாக்கி, இந்தளவுக்கு வளர்ச்சி காணச் செய்தவர்களும் இல்லை. அந்தக் கட்சியை வைத்துக் கொண்டு தேசிய அரசியலின் அச்சாணியை ஆட்டுவித்தவர்களும் இதுவரை இல்லை. மக்களை நேசித்த, மக்களால் இந்தளவுக்கு நேசிக்கப்பட்ட முஸ்லிம் தலைமை ஒருவர், வரலாற்றில் இதற்கு முன்னர் இருந்தார்களா என்பதும் சந்தேகமே.

அவர், முஸ்லிம்களின் அரசியல் தலைமையாக இருந்தபோதும், சிங்கள, தமிழ் மக்களுக்கும் கணிசமான சேவையை ஆற்றினார். அவையெல்லாம் பெரிதாகப் பேசப்படுவதில்லை. அதனாலேயே, முஸ்லிம்களுக்கான அரசியலை அஷ்ரபிற்கு முன் - பின் என நோக்க வேண்டியிருக்கின்றது.

இப்படிப்பட்ட பல காரணங்களுக்காக, மறைந்த தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப் நினைவுகூரப்பட வேண்டியவர்; கொண்டாடப்பட வேண்டியவர். அதில் அவரது எதிரிகளுக்குக் கூட மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால், இங்குள்ள கேள்வியும் விமர்சனமும் அவரை நினைவுகூர்வது பற்றியதல்ல என்பதைக் கவனிக்க வேண்டும்.

மாறாக, குருவின் வழிகாட்டல்களை மறந்த சிஷ்யர்கள் போல, ஆசிரியர்களின் சொல்பேச்சு கேட்காத மாணவர்களைப் போல இருந்து கொண்டு, வெறுமனே மறைந்த தலைவரை நினைந்தழுதால் மட்டும் போதுமா? அதனால் அவரது கனவை நிறைவேற்றியதாக ஆகி விடுமா என்பதுதான் இங்குள்ள கேள்வியாகும்.

எம்.எச்.எம் அஷ்ரப், என்ற தனிமனிதனிலும் அரசியல்வாதியிலும் கூட சில குறைபாடுகளை காணலாம். ஆக, அவரும் விமர்சனத்திற்கு விதிவிலக்கானவர் அல்ல. ஆயினும் அதனையெல்லாம் விட, பன்மடங்கு நல்ல பண்புகளைக் கொண்டிருந்ததுடன், குறிப்பிடத்தக்க சேவைகளை ஆற்றியதன் மூலம், மக்கள் மனங்களில் ஒரு ராஜாவைப் போல இன்னும் வீற்றிருக்கின்றார்.

தனது அரசியல் சகாக்களுடன் சேர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் இயக்கத்தை உருவாக்கிய எம்.எச். எம் அஷ்ரப், பேரம்பேசும் அரசியலை உச்சபட்சமாகப் பயன்படுத்தினார். மக்களுக்கு எது தேவை என்பதை உணர்ந்து செயற்பட்டார். மக்களுக்காக எந்தப் பெரிய சவாலையும் எதிர்கொள்ளத் தயாராக இருந்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவின்றி கிழக்கு மாகாண அரசியலை நடத்தவோ தேசிய ஆட்சியை நிறுவவோ முடியாத ஒரு நிலை வந்தது. அப்படியான வாய்ப்புகளைப் பயன்படுத்தி, இப்போதிருக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகளைப் போல 'டீல்' பேசி, தமது கல்லாப் பெட்டிகளை நிரப்பியவர் என்று அஷ்ரபை யாரும் கூற முடியாது.

சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி தனது அறிவுக்கு எட்டியவரை சரியாக காய்நகர்த்தினார். எம்.பி தெரிவுக்கான மாவட்ட வெட்டுப்புள்ளியை குறைத்தமை, உரிமை அரசியலில் முக்கியமான சாதனையாகும். அதுபோல முஸ்லிம்களுக்கான கௌரவத்தையும் அரசியல் அடையாளத்தையும் பெற்றுத்தர அவர் போராடினார்.

அவருடைய அபிவிருத்தி அரசியல் என்பது தூரநோக்கை கொண்டிருந்தது. தொழிலின்றியும் மட்டுப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைகளுடனும் இருந்தவர்கள் உள்ளடங்கலாக பல நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு தொழிலை வழங்கினார். தமிழ், சிங்கள இளைஞர்களும் இதில் உள்ளடங்குகின்றனர். அஷ்ரப் இல்லாவிட்டால் இவர்களில் பெரும்பாலானவர்கள் தொழிலற்றவர்களாககவே இருந்திருக்கலாம்.

மிக முக்கியமாக, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை நிறுவினார். ஒலுவிலில் நெற்களஞ்சியசாலை அமைந்திருந்த ஒரு தென்னந்தோட்டத்தில், தேசிய பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பதற்கு கனவு காண்பதும், அதனை செயலுருப்படுத்துவதும் லேசுப்பட்ட காரியமல்ல.

தென்கிழக்கு பல்கலைக்கழகம் மறைந்த தலைவரின் கனவை முழுமையாக நிறைவேற்றி உள்ளதா என்பது ஆய்வுக்குரிய வினாவாகும். ஆயினும், அஷ்ரப் தான் கண்ட கனவை மெய்ப்பட வைப்பதற்கு உழைத்து வெற்றியும் கண்டார். அதேபோன்று, ஒலுவில் துறைமுகத்திற்கான அடித்தளத்தை இட்டது உட்பட பல அபிவிருத்திகளைச் செய்தார்.

அவரது பெருவளர்ச்சி பெருந்தேசிய அரசியல் தலைவர்களுக்கு மட்டுமன்றி, அப்போது தென்னிலங்கை அரசியலில் முக்கிய இடத்தைப் பிடித்திருந்த முஸ்லிம் அரசியல்வாதிகளுக்குக் கூட, 'வயிற்றில் புளியைக் கரைப்பதாகவே' இருந்தது. கிழக்கைச் சேர்ந்த ஒருவன், கொழும்பு அரசியலை ஆட்டுவிப்பதை அவர்கள் அடியோடு விரும்பவேயில்லை.

ஆனால், அஷ்ரபின் துணிச்சல் யாருக்கும் இருக்கவில்லை. அவர் பேச வேண்டிய இடத்தில் பேசினார்; மௌனமாகச் செய்ய வேண்டியதை அவ்விதமே செய்தார்.

தமிழ்த் தலைமைகளோடும் தமிழ் மக்களோடும் நல்லுறவைப் பேணிவந்தார். ஆனால், விடுதலைப் புலிகளும் ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்களும் வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கு செய்த அட்டூழியங்களை பகிரங்கமாக எதிர்த்து போராடினார். சிங்கள ஆட்சியாளர்களையும் அவர் எதிர்க்கத் தயங்கவில்லை என்பதற்கு சந்திரிகாவுக்கு எழுதிய கடைசி கடிதம் ஒரு சாட்சியமாகும்.

இந்தப் பின்னணியிலேயே 2000ஆம் ஆண்டு செப்டெம்பர் 16ஆம் திகதி ஒரு விமான விபத்தில் அவர் இறந்தார்; அல்லது, அந்த விபத்து நிகழ்த்தப்பட்டது. அவரது மரணத்திற்குப் பிறகு என்ன பிரளயங்கள் எல்லாம் நடந்தன என்பதை நாடே அறியும்.

தலைவரின் மரணத்திற்கான பின்னணியை சரிவர அறிந்து மக்களுக்கு கூறாமல், தலைமைத்துவச் சண்டை தொடங்கியது. அது இன்று பல கட்சிகளாக, பல தலைவர்களாக வந்து நிற்கின்றது. ஆனால், முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள், மறைந்த தலைவர் விட்டுச் சென்ற இடத்திலேயே இன்னும் நிற்கின்றன.

இப்போதெல்லாம் மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப், பொதுவாக மூன்று தருணங்களில் நினைவுகூரப்படுகின்றார். அவரது பிறந்த தினத்தில், இறந்த தினத்தில், மற்றது தேர்தல் காலங்களில் எனலாம். அதைவிடுத்து அவரது சேவைகள் முன்கொண்டு செல்லப்படவும் இல்லை; அவரது வழியில் முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியல் பயணிக்கவும் இல்லை.

ஆகவே, மறைந்த தலைவரின் அரசியல் வாரிசுகள் எனச் சொல்லி மார்தட்டிக் கொள்வோர், அஷ்ரபிற்குப் பின்னர் முஸ்லிம் காங்கிரஸின் தலைவராகப் பொறுப்பேற்ற றவூப் ஹக்கீம் உள்ளடங்கலாக இன்று, 'அஷ்ரப்' என்ற அடையாளத்தை விற்றுப் பிழைக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகள் எல்லோரும் சமூகத்திற்கு கடந்த 23 வருடங்களில் என்ன செய்திருக்கின்றார்கள்?

அபிவிருத்தி அரசியலில் கிழக்கைச் சேர்ந்த ஹிஸ்புல்லாவும் அதாவுல்லாவும் கொஞ்சம் சோபித்தார்கள் என்றாலும், அதுவும் அவரவர் பிரதேசங்கள் சார்ந்தது என்ற கருத்தும் உள்ளது. அவர்களைத் தவிர பல காங்கிரஸ்களின் எம்.பிக்களாக இருந்தவர்கள், தற்போதைய எம்.பிக்கள் என்ன குறிப்பிடத்தக்க அபிவிருத்தி அரசியலைச் செய்துள்ளார்கள்?

தலைவரின் மரணத்திற்கு பின்னர், முஸ்லிம்களின் எந்த நீண்டகால பிரச்சினையை, குறுங்கால விவகாரத்தை முஸ்லிம் எம்.பிக்கள் தீர்த்து வைத்திருக்கின்றார்கள்? எந்த உரிமைக்காக அவரைப் போல பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் குரல் கொடுத்திருக்கின்றார்கள்? அதில் எந்த உரிமையை வென்று கொடுத்திருக்கின்றார்கள்?

அப்படி எதையுமே செய்யாமல், அதாவது மறைந்த தலைவரின் வழியில் செல்லாமல், வருடத்திற்கு இரண்டு தடவை நினைவுநிகழ்வுகளை கிழக்கு மாகாணத்தில் நடத்தினால் அஷ்ரபின் கனவு நனவாகி விடுமா? அவரது வழிமுறையை பின்பற்றியதாக ஆகிவிடுமா என்ற கேள்விக்கு மு.கா. தலைவர் உள்ளடங்கலாக அனைத்து முஸ்லிம் அரசியல்வாதிகளும் பதில் கூற வேண்டும்.

உண்மையில், மறைந்த தலைவர் எம். எச்.எம் அஷ்ரப் போல, அதற்குப் பிறகு வந்த மு.கா. தலைவரான ஹக்கீமோ அல்லது வேறு முஸ்லிம் தலைவர்கள், எம். பிக்களோ இமாலய சேவைகளைச் செய்திருந்தால், மக்கள் மனங்களை வென்றிருந்தால், முஸ்லிம் மக்கள் இன்றும் அஷ்ரபின் வெற்றிடத்தை உணர்ந்து கொண்டிருக்க மாட்டார்கள்.

அதைவிடுத்து, அஷ்ரப் போல ஒருவர் நமக்கு இல்லாமல் போய்விட்டார்களே என்று முஸ்லிம்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கைச் சேர்ந்தவர்கள் மனதுக்குள் புலம்புகின்றார்கள் என்றால், அஷ்ரப் விட்டுச் சென்ற இடத்தை அவருக்குப் பின்னர் பிரதிநிதித்துவ அரசியலுக்குள் நுழைந்த கிட்டத்தட்ட 25 முஸ்லிம் அரசியல்வாதிகள் அவரது இடத்தை நிரப்பவில்லை என்பதுதான் அர்த்தமாகும்.



## வாழ்வியல் தரிசனம்

தெருவோரங்களில் குப்பை கொட்டுபவர்கள், தங்கள் வீடுகளின் முன்னால் கொட்ட மாட்டார்கள். ஆனால், இரவுப் பொழுதில், அதிகாலையில் திருடர்கள் போல வந்து, தங்களின் வீட்டுக் கழிவுகளை, ஊரவர்களின் வீடுகளுக்கு முன்னால் போடுவது வாடிக்கையான செயலாகி விட்டது.

நகரங்களில், பொது இடங்களில் தெருக்களிலும் இத்தகைய செயல்களை அச்சமின்றி செய்கின்றார்கள். பொலிஸாரோ அல்லது பொதுமக்களோ இதைக் கண்டுகொள்வதில்லை.

மேலும் வெற்றிலையை வாயில் சப்பியவாறு, அதை பொதுமக்கள் நடந்து செல்லும் பாதையில் துப்பி விடுகின்றவர்கள், மனச்சாட்சி இல்லாத பேர்வழிகள்.

முக்கியமாக பஸ் தரிப்பிடத்துக்கு வந்து போகும் பயணிகளில் அநேகர், எந்த வித வெட்கமும் இன்றி, இரத்த நிறத்தில் வெற்றிலையைத் துப்பிச் செல்கின்றார்கள். எவருமே இதைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். பயணம் செய்தபடி இருக்கும் வாகனங்களில் இருப்போர், யன்னல் வழியாக எச்சில் துப்புவதால், வழியில் செல்பவர்கள், அரு வருப்புடன் கோபத்துக்கு உள்ளாகின்றார்கள்.

இந்த அநியாயங்கள் எப்பொழுது நிறுத்தப்படும்? சுகாதாரம் இன்றி வாழ்வது சிலருக்கு விருப்பனமான விடயமாகி விட்டது.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பண்டாரமிடுக்கில் சேதமடைந்துள்ள உவநீர் தடுப்பணையை புனரமைக்கவும்

கிளிநொச்சி, பூநகரி, கிராஞ்சி பகுதியில் உள்ள பண்டாரமிடுக்கு பகுதியில் சேதமடைந்துள்ள உவர்நீர் தடுப்பணையை புனரமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராஞ்சி, பண்டாரமிடுக்கு பகுதியில் சேதமடைந்து காணப்படுகின்ற உவர்நீர் தடுப்பணையானது, ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கின்ற போதும், குறித்த உவர் நீர்த்தடுப்பணை சேதமடைந்துள்ளதாகவும் மழைக்காலங்களிலும் கடல் நீர் பெருக்கெடுக்கின்ற காலங்களிலும் விவசாய நிலங்களுக்குள் உவர் நீர் உட்புகும் நிலைமை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டி உள்ள விவசாயிகள், குறித்த தடுப்பணையை புனரமைப்புச் செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த உவர்நீர் தடுப்பணை அமைக்கப்படாதவிடத்து, தற்போது விவசாயம் செய்து வரும் பகுதிகளிலும் இவ்வாறு உவர் நீர் பாதிப்புகள் ஏற்படும் அபாய நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டி உள்ள இவர்கள், குறித்த பகுதியிலே மேலும் ஆயிரம் ஏக்கர் பகுதி நிலம் விவசாயம் செய்யக் கூடியதாக இருப்பதாகவும் அவ்வாறான காணிகளை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைப்புகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பா. ஜதுர்சனா

## சமூகத்தில் அதிகரிக்கும்

# சமூக ஊடகங்களின் தாக்கம்






ரிகாஸா ரிபாஸ்
ஊடகக் கற்கைகள் துறை,
இரண்டாம் வருடம்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

தற்கால மனிதனின் அன்றாட வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாகவே சமூக ஊடகங்கள் காணப்படுகின்றன. தகவல்களை அனுப்புநருக்கும் பெறுநருக்கும் இடையில், உலகெங்கிலும் விரைவாகவும் உடனுக்குடனும் தங்கள் இணைப்புகளை வழங்கும் ஆற்றலை ஊடகங்கள் கொண்டிருக்கின்றன என்றே கூறலாம். இச் சமூக ஊடகங்கள், பிரபலமான முறையில் மக்கள் மத்தியில் நாளாந்தம் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

உலகின் எல்லா அம்சங்களும் சாதகம், பாதகம் என்ற இரு அம்சங்களால் கட்டமைக்கப்படுவது சமூக ஊடகங்களுக்கு மாத்திரம் விதிவிலக்கல்ல. சமூக ஊடகங்களும் சாதக பாதகங்களைத் தனக்குள் உள்ளீர்த்து இயங்குவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

சமூக ஊடகங்கள் மக்களிடையே தகவல்களைப் பரிமாறிக் கொள்வதில் வேகமாக செயற்படுவதோடு உணர்வு ரீதியான தூரத்தை அதிகரிக்கும் செயற்பாட்டுத் தன்மையையும் கொண்டுள்ளது. சமூக ஊடகங்களின் வளர்ச்சி மற்றும் பயன்பாடு வெகுஜன ஊடகங்களின் தகவல் தொடர்புகளின் பாரிய புரட்சி என்றே கூறலாம். WhatsApp, Facebook, Instagram, Twitter, Pinterest முதலான இன்னும் பல சமூக ஊடகத் தளங்கள், தங்கள் வலைத்தளம் சார்ந்து நாளுக்கு நாள் புதிய தொழில்நுட்ப மேம்படுத்தல்களை வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. சமூக ஊடகப் பயனர்கள், வயது வேறுபாடின்றி அவற்றைப் பயன்படுத்தப்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

சமூக ஊடகங்களின் தாக்கத்தின் விளைவா,க ஓர் உலகளாவிய சமூகத்தின் வளர்ச்சியை நம்மால் உணரக்கூடியதாகவும் அமைகின்றது. அரசியல் முதல் கலையம்சங்கள் வரை மக்கள் தங்கள் கருத்துகளை சுதந்திரமாக வெளிப்படுத்த சமூக ஊடகங்களே துணை செய்கின்றன. ஊடகங்கள், தங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் பார்வையாளர்களை அதிகரிக்கச் செய்து, தங்களது ஊடகத் தளத்தை தொழில்நுட்ப ரீதியாக முன்னோக்கிக் கொண்டு செல்கின்றன.

மக்களின் அன்றாட வாழ்வில் பல சாதகங்களை ஏற்படுத்துவதில் ஊடகங்கள் வல்லமை பெற்றுள்ளது என்றால் மிகையாகாது. கல்வி கற்கும் மாணவர்கள் தொடங்கி, பல தலைமுறையினரும் பயனடையும் விதத்தில் கட்டமைக்கப்பட்டு இயங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

முன்னைய ஆய்வுக் கணக்கெடுப்புகளின்படி, 90% மாணவர்கள் சமூக வலைப் பின்னல்களை பயன்படுத்தி, தங்கள் கல்வி சார்ந்து பயனடைந்து வருகின்றனர். வாழ்க்கையின் யதார்த்தங்களை புரிந்து நடக்க வேண்டுமென்றால், நம்மை சார்ந்திருப்பவரின் தொடர்பை நாம் பேணுவது அத்தியாவசியம் என்றே கூறலாம். புதிய நண்பர்களைக் கண்டு கொண்டு நட்புறவாடவும் தங்கள் ஆர்வத்தையும் இலட்சியங்களையும் பகிர்ந்து கொள்ளவும் வழிகாட்டும் ஓர் வழிகாட்டியாக சமூக ஊடகங்களே செயற்படுகின்றன.

தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்காக மக்கள் அதிகம் பயன்படுத்தும் ஊடகங்கள் வணிக ரீதியாகவும் அதிகளவில் மக்கள் மத்தியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மக்களின் வாழ்க்கை முறை, சமூக ஊடகங்களின் தாக்கத்தால் மாற்றத்திற்கு உட்படுகின்றது. அதேபோன்று, இன்று பலர் தங்களை சமூகத்தில் பிரபலப்படுத்தி, மக்கள் மத்தியில் நல்ல அபிப்பிராயங்களைப் பெறும் நோக்கில், சமூக ஊடகங்களையே கருவியாகப் பயன்படுத்தும் போக்கையும் அவதானிக்கலாம்.

இரு வழித் தொடர்பிற்கு வழி செய்யும் ஓர் கருவியாகவும் சமூக ஊடகங்கள் செயற்படுகின்றன. 'மனிதன் ஓர் சமூகப் பிராணி' என்ற வகையில் சமூகத்துடன் இணைந்து வாழ்வதையே அதிகம் விரும்புகின்றான். எனவே, சமூக ஊடகங்களின் ஊடாக, தங்கள் தொடர்புகளை அதிகரிக்கவும் செய்கின்றான்.

சமூக ஊடகங்கள் நேர்மறையான தாக்கங்களை கொண்டிருந்தாலும் சில எதிர்மறையான தாக்கங்களுக்கும் உட்பட்ட வண்ணமே செயற்படுகின்றது. சமூக ஊடகங்களின் வருகைக்கு முன்னர், அதிகமாக மக்கள் எழுத்துகளை வாசிப்பதிலேயே ஆர்வத்தை கொண்டிருந்தனர். என்றாலும், அந்த ஆர்வத்தை சிதைக்கும் வகையில் மக்கள் மத்தியில் வாசிப்பு மீதான ஆர்வத்தை சமூக ஊடகங்கள் சிதைத்துள்ளன என்பதை யாராலும் மறுக்க முடியாது.

பத்திரிகைகள், புத்தகங்கள், எழுத்து மூலமான ஆவணங்கள் இன்றி மனிதனால் தகவல்களைப் பெற்று, சமூகத்தைப் புரிந்து வாழும் தன்மையை சமூக ஊடகங்களின் வருகை முற்றிலும் உடைத்தெறிந்து விட்டன என்றே கூறலாம்.




சில நேரங்களில் மக்களை வன்முறை ரீதியாக ஈடுபடச் செய்வதற்கும், தீங்கிழைக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தூண்டும் வழிவகைகளை உருவாக்கும் இடமாகவும் சமூக ஊடகங்கள் செயற்படுகின்றன. ஊடகங்களை நுகரும் பல பயனர்கள், புண்படுத்தப்படும் கருத்துகளுக்கு உட்படுவதாக ஆய்வுகளில் தெரிய வந்துள்ளமை முக்கிய விடயமாகும். ஒரு மனிதனின் தனிப்பட்ட எண்ணங்கள், உணர்வுகள் என்பன அனைத்து சமூக ஊடகங்களிலும் பகிரப்பட்டே வருகின்றன. இவ்வாறான செயல்கள் ஆரோக்கியமற்ற முறையில் காணப்படுவதோடு, யதார்த்தமான வாழ்க்கையிலிருந்து ஒவ்வொருவரையும் தூரமாக்கிவிடும் வல்லமையையும் கொண்டுள்ளன.

சமூக ஊடகங்கள் மக்களைத் தன்பால் ஈர்த்து அடிமையாக்குவதோடு ஒவ்வொரு தனி மனிதனின் நேரத்தையும் சூறையாடி அம்மனிதனை ஊடகத்தின் அடிமையாக மாற்றும் செயற்பாட்டை மறைமுகமாக மேற்கொள்கின்றது. அதிகளவான ஊடகப் பயன்பாடானது மனச்சோர்வு, மன அழுத்தம் மற்றும் எதிலும் ஈடுபாடற்ற தன்மை என்றவற்றை தாங்களே அறியாமல் தங்களுக்குள் விதைக்கும் ஆற்றலைக் கொண்டது. தனிமை உணர்வை அதிகம் உணரும் போதும் கவலையான சூழ்நிலையை கடந்து செல்வதற்காகவும் சமூக ஊடகங்களின் துணையையே பலரும் நாடுகின்றனர். என்றாலும், எப்போதும் அந்நிலை ஆரோக்கியமற்றதாகவே காணப்படும். சமூக ஊடகப் பயன்பாட்டில் பயம் இன்மை என்ற ஒரு விடயம் ஆழமான முறையில் வேரூன்றி காணப்படுகின்றது. ஏனென்றால், தங்களின் கருத்துகளை முகம் காணாத யாரோ ஒருவருக்கு திணிப்பதற்கான உந்து சக்தியாக மக்கள் சமூக ஊடகங்களையே கையாள்கின்றனர்.

இங்கிலாந்தில் இளைஞர்களை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில், சமூக ஊடகங்கள் தனிமனிதனை மனரீதியாக தாக்கத்திற்கு உட்படுத்துகின்றது என்பதற்கு ஆய்வாளர்கள் விளக்கமளித்தனர். என்றாலும், அந்த ஆய்வின் முடிவுகள் அனைவருக்கும் சற்று ஆச்சரியத்தையே உண்டு பண்ணியது. ஏனென்றால், அந்த ஆய்வானது சமூக ஊடகங்கள் மக்களை எவ்வாறு நேரடியாக பாதிக்கின்றது என்பதை கூறவில்லை. மாறாக, சமூக ஊடகங்களிற்கு மறைமுகமாக முறையில் மக்கள் பாதிக்கப்படும் வழியை மட்டுமே சுட்டிக்காட்டியிருந்தது. மனிதர்கள் தங்களை அறியாமலேயே தங்களுக்குள் ஓர் எண்ணத்தை ஆழமாக விதைத்துள்ளனர். அதாவது, உண்மையில் ஒரு விடயத்தை எதனுடன் ஒப்பிட வேண்டுமோ அதைத் தவிர்த்து, வேறொரு விடயத்துடன் ஒப்பிடும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். இந்நிலையை மக்கள் மத்தியில் சமூக ஊடகங்களே விதைத்துள்ளன.

ஒரு மனிதன் சமூக ஊடகத்தின் அடிமையாகும் போது, அவனது முழு நேர சிந்தனையும் ஊடகங்களைச் சார்ந்ததாகவே இருக்கும். தேவையற்ற நேரங்களில் கூட பலமுறை சமூக ஊடகங்களில் தங்களை நினைவுபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தையும் பலர் கொண்டுள்ளனர்.

நீங்கள் சமூக ஊடகத்துக்கு அடிமையானவரா என்பதை அறிந்து கொள்வதற்காக, உளவியல் ரீதியாகப் பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. தொழில்முறை சார்ந்த சமூக ஊடக வலைத்தளங்கள், தங்கள் தொழில் சார்ந்து தனித்து விளங்க விரும்புபவர்களுக்கு முக்கியமானதோர் இடமாகவே காணப்படுகின்றது. சமூக ஊடகங்களின் நீண்ட நேர பயன்பாடானது, அடுத்தவர்களின் வாழ்க்கை முறையில் அதிக கவனம் செலுத்த வழிவகுப்பதோடு, தேவையற்ற விடயங்களை தங்களுக்குள் உள்ளீர்க்கவும் வழி செய்கின்றது.

அதாவது, நீங்கள் எந்தவொரு சிந்தனையும் இல்லாமல் ஒரு சமூக ஊடக செயலிக்குள் நுழைகின்றீர்கள். நுழைந்ததும் பல முறை நான் எப்படி இச்செயலிக்குள் உள் நுழைந்தேன் என்ற கேள்வி உங்கள் மனதினுள் எழுந்த வண்ணமே காணப்படும். இந் நிலையானது, ஒரு மனிதனின் சமூக ஊடகப் பாவனையின் அடிமையான தன்மையையே காட்டுகின்றது. அதுமட்டுமின்றி, இன்னும் பலர் தங்கள் நண்பர்களுடன் ஒன்று கூடி இருக்கும் வேளையிலும் அவர்களுடன் நேரத்தை செலவிடாது, சமூக வலைத்தளங்களில் முகம் காணாத நண்பனின் சுகதுக்கங்களை விசாரித்துக் கொண்டிருப்பார்கள்.

சமூக ஊடகங்கள் அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளில் குறிப்பிடத்தக்க வகையில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். எதார்த்தத்துக்கு முரணான சிதைந்த பார்வையை முன்வைப்பதாகவே சமூக ஊடகங்கள் செயற்படுகின்றன. ஊடகங்கள் தவறான தகவல்களை பரப்பும் செயலானது, மக்கள் மத்தியில் எதிர்மறையான தாக்கங்களை விளைவிக்கும் பேராற்றலை கொண்டது.


சமூக ஊடகங்களில் விளம்பரத்தின் பங்கு அதிகூடியது என்றே கூறலாம். விளம்பரதாரர்கள் தங்கள் சேவைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக பயன்படுத்தும் உத்தியாகவே சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர். சமூக ஊடகங்களின் வருகைக்கு முன்னர் தங்கள் சொந்த அனுபவத்தையும் அறிவையும் கொண்டு தெரிவு செய்யும் சேவைகளைத் தேர்ந்தெடுத்தனர். ஆனால், தற்காலத்தில் சமூக வலைத்தளங்களின் விளம்பரங்களால் ஈர்க்கப்பட்டு, தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் நிலை உருவாகியுள்ளமையை அவதானிக்கலாம். சமூகத்தின் நெறிமுறைகள், சுற்றுச்சூழலின் தாக்கங்கள் மற்றும் அரசியல் ரீதியிலான மாற்றங்கள் என்பவை சமூக ஊடகத்தின் துணையுடனேயே நிகழ்கின்றன. சமூக ஊடகச் செயற்பாடானது சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகளைப் பற்றிய விழிப்புணர்வுகளை அதிகரித்தாலும், இந்த விழிப்புணர்வுச் செயற்பாடு உண்மையான மாற்றமாக மாறுகின்றதா என்ற பல கேள்விகளும் எழுகின்றன.

சமூக ஊடகங்களைப் பயன்படுத்தாமல் ஒரு நாள் கூட ஒதுங்கியிருக்க முடியாத அளவிற்கு சமூக ஊடகங்களின் தாக்கம் மக்கள் மத்தியில் பரவியுள்ளது. மக்களுடனான உறவுகளை பேணுவதற்கான பெரிய முயற்சிகள் எதையுமே சமூக ஊடகத்துடன் உறவுகளைப் பேணுபவர்கள் மேற்கொள்வதில்லை.

மக்களை சமூகத்துடன் ஒன்றிணைக்கும் வகையில் சமூக ஊடகங்களை மக்களுக்காக நிறுவி, சாதகத்தையும் பாதகத்தையும் ஒரு சேர வழங்கும் சமூக ஊடகங்கள் நம் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்களை உணர்ந்து செயற்பட வேண்டும்.

# நீச்சல் ரொமான்டிக்






நடிகை நயன்தாரா, தனது காதலர் விக்னேஷ் சிவனை கடந்த ஆண்டு திருமணம் செய்துகொண்டார். இந்தக் காதல் தம்பதிக்கு இரட்டை குழந்தைகள் உள்ளனர்.

சமீபத்தில் இன்ஸ்டாகிராமில் என்ட்ரி கொடுத்த நயன்தாரா, தனது இரட்டை குழந்தைகளுடன் இருக்கும் வீடியோவை வெளியிட்டு இருந்தார்.

மேலும் தன்னுடைய புதிய வர்த்தகம் குறித்தும் அதில் பதிவு செய்திருந்தார். குடும்ப வாழ்க்கை ஒரு பக்கம் இருக்க 'இறைவன்', 'நயன் 75', 'டெஸ்ட்', 'மண்ணாங்கட்டி' என பல படங்களை கைவசம் வைத்துள்ளார். நயன்தாரா - விக்கியின் புகைப்படங்கள் அவ்வப்போது இணையத்தில் வைரலாகும். அந்த வகையில் தற்போது நீச்சல் குழத்தில் நயன்தாரா - விக்னேஷ் சிவன் இருக்கும் ரொமான்டிக் புகைப்படம் ஒன்று வெளியாகி ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகிறது.

# கவனத்தை ஈர்த்த பிந்து




தெலுங்கு படங்களில் நடித்து வந்த நடிகை பிந்து மாதவி, 'கழுகு' படம் மூலம் தமிழ் ரசிகர்கள் மத்தியில் பிரபலமானார். சமீபத்தில் இவர் பதிவிட்ட புகைப்படங்கள் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து இணையத்தில் வைரலானது. இதன் காரணம் அவர் தனது உடல் எடையை குறைத்து, ஒல்லியான தோற்றத்துக்கு மாறியுள்ளார் என்பதை ரசிகர்களுக்கு காட்டும் விதமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நயன்தாராவின் 'மண்ணாங்கட்டி'

நடிகை நயன்தாரா திருமணத்துக்குப் பிறகு சினிமாவில் பிஸியாக நடித்து வருகிறார். இந்தாண்டு நயன்தாரா நடிப்பில் வெளியீடாக ஹிந்தி படமான 'ஜவான்' வரவேற்பை பெற்றுள்ளது. அடுத்து, தமிழில் ஜெயம் ரவி உடன் நடித்துள்ள 'இறைவன்' படம் வெளியாக உள்ளது. தற்போது அவர் 'டெஸ்ட்' உள்ளிட்ட சில படங்களில் நடித்து வருகிறார்.

இந்நிலையில் இவரின் புதிய படத்தின் அறிவிப்பு வெளியாகி உள்ளது. அறிமுக இயக்குநர் 'ப்ளாக் ஷிப் டியுட்' விக்கி இயக்கும் இந்தப் படத்தில் முதன்மை கதாபாத்திரத்தில் நயன்தாரா, யோகி பாபு நடிக்கின்றனர். 'கோலமாவு கோகிலா' படத்திற்கு பின் இருவரும் இணைந்து இந்தப் படத்தில் முதன்மை வேடங்களில் நடிக்கி-ன்றனர்.






# தெலுங்கு போஸ்ட்டரை வெளியிட்ட படக்குழு

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகி வரும் படம் 'லியோ'. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரிக்கிறார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மத்யூ தோமஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள்வி றுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

# அப்செட் ஆன ஷங்கர்



தமிழ் திரையுலகின் முன்னணி இயக்குனரான ஷங்கர் இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் 'கேம் சேஞ்சர்'. ராம் சரண் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தில் கியாரா அத்வானி கதாநாயகியாக நடிக்கிறார். மேலும், எஸ்.ஜே.சூர்யா, அஞ்சலி, ஸ்ரீகாந்த், சமுத்திரக்கனி உட்பட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.

ஸ்ரீ வெங்கடேஸ்வரா கிரியேஷன்ஸ் சார்பில் தில் ராஜு தயாரிக்கும் இப்படத்திற்கு தமன் இசையமைக்கிறார். இந்நிலையில், 'கேம் சேஞ்சர்' திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள 'ஜாபிலம்மா' என்ற பாடல் ரிலீஸாகுவதற்கு முன்பே சமூக வலைதளத்தில் லீக்காகியுள்ளது. ரூ.15 கோடி பட்ஜெட்டில் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் இந்தப் பாடல் லீக்கானதால் படக்குழு அதிர்ச்சியில் உள்ளது. மேலும், இந்தப் பாடலை சமூக வலைதளத்தில் இருந்து நீக்கும் பணியில் படக்குழு ஈடுபட்டுள்ளது.

உத்தர பிரதேசம்

# திருமணம் நடக்காதால் லிங்கத்தை திருடிய இளைஞர்

மனிதர்களால் இயலாத காரியத்தை கடவுள் நிறைவேற்றி வைப்பார் என்ற நம்பிக்கை பலருக்கும் உள்ளது. இதைத் தவிர, கடவுளிடம் ஏதாவது வேண்டும் என்று பிரார்த்தனை செய்வோம். ஒரு சிலருக்கு வேண்டியது நிறைவேறும் அல்லது தாமதமாகும். ஒரு சிலருக்கு வேண்டிக்கொண்டது நிறைவேறாமல் போகும்

உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த சோட்டு என்ற இளைஞன் ஒருவன் தான் விரும்பிய பெண்ணை திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று சிவபெருமானை வேண்டி உள்ளார். ஆனால் அவரது விருப்பம் நிறைவேறவில்லை. தன்னுடைய வேண்டுதலை நிறைவேற்ற தவறியதால் கோவிலில் இருந்த சிவலிங்கத்தை அந்த இளைஞர் திருடிச் சென்றுள்ளார்.






# நீருக்கு அடியில் மெட்ரோ ரயில் சேவை

இந்தியாவில் பலவகையான போக்குவரத்து உள்ளன. பஸ், ரயில் விமானம், மெட்ரோ ரயில், படகு போக்குவரத்து ஆகியவை நடைமுறையில் உள்ளன. இவற்றில் படகு போக்குவரத்து கேரளா மாநிலத்திலும் மற்றும் தீவுகளுக்கு செல்லவும் பயன்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நீருக்கு அடியில் செல்லும் மெட்ரோ ரயில் சேவையை கொல்கத்தா மெட்ரோ ரெயில் கார்ப்பரேஷன் முதல் முறையாக தொடங்க உள்ளது. இதற்காக கொல்கத்தா மாநிலத்தில் இருந்து ஹவுரா பகுதி வரை ஹூக்ளி ஆற்றின் நீருக்கு அடியில் சுரங்கப்பாதை கட்டப்பட்டுள்ளது.

கொல்கத்தாவில் உள்ள இந்த மெட்ரோ சுரங்கப்பாதைகள், லண்டன் மற்றும் பாரிஸ் இடையேயான யூரோஸ்டார் ரயில்கள் சேனல் சுரங்கப்பாதை வழியாகச் செல்வதைப் போலவே கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ராஜஸ்தான்


# 26 விரல்களுடன் பிறந்த குழந்தை

ஒரு தம்பதிக்கு 26 விரல்களுடன் பெண் குழந்தை பிறந்த சம்பமொன்று ராஜஸ்தான் மாநிலம் பரத்பூர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அந்த குழந்தையின் ஒவ்வொரு கையிலும் 7 விரல்கள் மற்றும் ஒவ்வொரு காலிலும் 6 விரல்கள் என மொத்தம் 26 விரல்கள் இருந்தன.

குழந்தைகளுக்கு 26 விரல்கள் இருப்பது அரிதானது. இதுகுறித்து அந்த பெண்ணுக்கு பிரசவம் பார்த்த வைத்தியர் கூறுகையில், குழந்தைக்கு 26 விரல்கள் இருப்பது எந்தவித பாதிப்பும் இல்லை. ஆனால் இது ஒரு மரபணு கோளாறு ஆகும் என்றார்.






அமெரிக்கா


# கடல் மீனை சாப்பிட்டு கோமாவுக்குச் சென்ற பெண்

மீன் சாப்பிட்டால் உடலுக்கு நல்லது என்று சொல்வார்கள். ஆனால் அமெரிக்காவில் மீன் சாப்பிட்ட 40 வயதான லாரா பராசாஸ் என்ற பெண் கை, கால்களை இழந்து உயிருக்கு போராடி வருகிறார். இவர் திலப்பியா என்ற மீனை சமைத்து சாப்பிட்ட சிறிது நேரத்தில் அவரது உடலில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஆனாலும் அவர் கோமா நிலைக்கு சென்றார். மேலும் சிறுநீரகமும் பாதிக்கப்பட்டு ,கை, கால்களும் முற்றிலும் செயல் இழந்ததால் உயிருக்கு போராடி வருவதாக லாரா பராசாஸின் தோழி தெரிவித்துள்ளார்.

நேபாளம்

# புகைப்படம் எடுத்தால் அபராதம்



நேபாளத்தில் உலக பிரசித்திப் பெற்ற பசுபதிநாத் கோவில், பாக்மதி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது.

இக்கோவிலுக்கு இந்தியா மட்டுமின்றி, உலகின் பல நாடுகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தினமும் வந்து செல்கின்றனர். இந்தக் கோவில் வளாகத்துக்குள் புகைப்படம், வீடியோ எடுப்பது ஏற்கெனவே தடை செய்யப்பட்டுள்ளது.

ஆனால் கோவிலுக்கு வரும் இளைஞர்கள் சிலர் தடையையும் மீறி ஆர்வமிகுதியில் புகைப்படம் எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இதுபோன்ற செயலில் ஈடுபட்டால் இனிமேல் ரூ.500 முதல் ரூ.2,000 வரை அபராதம் விதிக்கப்படும் என கோவில் நிர்வாகம் எச்சரித்துள்ளது. ஆண்டுதோறும் நடைபெறும் பிரபல டீஜ் பண்டிகை தொடங்கியுள்ள நிலையில், பசுபதிநாத் கோவில் நிர்வாகம் இதுபோன்று உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



டெஹ்ரான்

# மாஷா அமினின் தந்தை கைது

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் ஹிஜாப் சரியாக அணியவில்லை எனக்கூறி பொலிஸாரால் இளம்பெண் மாஷா அமினி கைது செய்யப்பட்டார். விசாரணையின்போது அவர் மர்மமான முறையில் உயிரிழந்தார். இதனை கண்டித்து நாடு முழுவதும் போராட்டம் வெடித்தது.

இதில் பொலிஸாருடன் நடந்த மோதலில் குழந்தைகள், பெண்கள் உள்பட 500-க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். இந்த போராட்டங்கள் தொடர்பாக 7 மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன

இதனிடையே மாஷா அமினி உயிரிழந்து ஓராண்டு கடந்துள்ள நிலையில், அரசின் எச்சரிக்கையை மீறி மாஷாவின் பெற்றோர் தங்கள் மகளின் கல்லறையில் நினைவு தினம் அனுசரிக்கப் போவதாக தகவல்கள் வெளியாகின. இந்நிலையில் மாஷா அமினியின் தந்தை, அவரது மகளின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தன்று கைது செய்யப்பட்டு கடும் எச்சரிக்கைக்குப் பிறகு விடுவிக்கப்பட்டார்.

ரஷ்யா

# உக்ரேன் அகதிகளுக்கு உதவும் ரஷ்யர்கள்

2022 பெப்ரவரியில் ரஷ்யா, தனது அண்டை நாடான உக்ரேனை ஆக்ரமித்தது. ரஷ்யாவை எதிர்த்து அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் உதவியுடன், உக்ரேன் கடுமையாக போரிட்டு வருகிறது.

இப்போர் குறித்து ரஷ்யாவையோ, ஜனாதிபதி விளாடிமிர் புட்டினையோ விமர்சிப்பவர்கள் மீது ரஷ்ய அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. ஆனால் அரசுக்கு தெரியாமல், உக்ரேன் அகதிகளுக்கு ரஷ்யாவை சேர்ந்த பலர் மனிதாபிமான உதவிகளை செய்து வருகின்றனர்.

.ராணுவ தாக்குதல் காரணமாக ரஷ்யாவிற்கோ அல்லது ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள உக்ரேனின் பிராந்தியங்களுக்கோ, உக்ரேனின் பிற பகுதிகளிலிருந்து மக்கள் அகதிகளாக தினம்தினம் வந்திறங்குகின்றனர். தங்களது வீடு, உடைமைகள் மற்றும் செல்வம் அனைத்தையும் இழந்து அகதிகளாக எதிர்காலம் குறித்த அச்சத்துடன் வந்திறங்கும் உக்ரேனியர்களுக்கு ரஷ்ய மக்கள் தன்னார்வலர்களாக உதவி செய்து வருகின்றனர்.



அவுஸ்திரேலியாவுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய தென்னாபிரிக்கா

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை தென்னாபிரிக்கா கைப்பற்றியது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், ஜொஹன்னஸ்பேர்க்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐந்தாவது போட்டியை வென்றமையைத் தொடர்ந்தே 3-2 என்ற ரீதியில் தொடரை தென்னாபிரிக்கா கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

தென்னாபிரிக்கா: 315/9 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஏய்டன் மார்க்ரம் 93 (87), டேவிட் மில்லர் 63 (65), மார்கோ ஜன்சன் 47 (23), அன்டிலி பெக்லுவாயோ ஆ.இ 38 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: அடம் ஸாம்பா 3/70, ஷோன் அபொட் 2/54, கமரொன் கிறீன் 1/59, நாதன் எலிஸ் 1/49)

அவுஸ்திரேலியா: 193/10 (34.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: மிற்செல் மார்ஷ் 71 (56), மர்னுஸ் லபுஷைன் 44 (63) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்கோ ஜன்சன் 5/39, கேஷவ் மஹராஜ் 4/33, அன்டிலி பெக்லுவாயோ 1/44)

போட்டியின் நாயகன்: மார்கோ ஜன்சன்

தொடரின் நாயகன்: ஏய்டன் மார்க்ரம்

சேர் ஜோன் டாபட் மெய்வல்லுநர் போட்டி:

# வெற்றிவாகை சூடிய யாழ்ப்பாணம், சுழிபுரம் விக்டோரியாவின் தமிழரசி

அஸ்ஹர் இப்றாஹிம்



சேர் ஜோன் டாபட் மெய்வல்லுநர் போட்டியில் 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான வேகநடைப் போட்டியில் யாழ்ப்பாணம், சுழிபுரம் விக்டோரியா கல்லூரியைச் சேர்ந்த மாணவி ஜே. தமிழரசி முதலிடம் பெற்றுள்ளார்.

தமிழரசி 34.40 செக்கன்களில் குறிப்பிட்ட தூரத்தை கடந்து முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

# பளுதூக்கலில் கதுர்சிகா முதலாமிடம்

அ. அச்சுதன்



அகில இலங்கை ரீதியிலான பளுதூக்கும் போட்டியானது நேற்று முன்தினம் நடைபெற்றபோது திருகோணமலை சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலய மாணவியான சுரேஷ்குமார் கதுர்சிகா முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

வத்தளை லைசியம் சர்வதேச பாடசாலையில்

# கடினபந்து கிரிக்கெட் பயிற்சி கூடம் திறந்து வைப்பு

அஸ்ஹர் இப்றாஹிம்

பாடசாலை மாணவர்களின் கிரிக்கெட் விளையாட்டை மேலும் வலுவூட்டும் வகையில் வத்தளை லைசியம் சர்வதேச பாடசாலையில் கடினபந்து கிரிக்கெட் பயிற்சி கூடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்

# சமநிலையில் செல்சி போர்ண்மெத் போட்டி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், போர்ண்மெத்தின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் செல்சி சமப்படுத்தியது.

இந்நிலையில் எவெர்ற்றனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் லியனார்டோ ட்ரோஸார்ட் பெற்ற கோலுடன் 1-0 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 19 செப்டெம்பர் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.